*18*

# நீங்கள் பயணம் செய்யும் வழி எது?

## (மத்தேயு 7:13-20)

வேதாகமத்தின் போதனையின்படி நாம் வாழ்வினூடே குடியிருப்பவர்கள் என்பதற்கு மாறாகப் பயணிகளாகச் சென்றுகொண்டிருக்கிறோம். "நாம் பயணம் செய்யும் வழி எது?" என்பது கேள்வியாக உள்ளது. வேகம் என்பதல்ல ஆனால் அடைவிடம் என்பதே ஒரு பயணியின் முதல் அக்கறைக்குரிய விஷயமாக உள்ளது. "சரியான திசையை நோக்கி இருந்தால் ஒழிய விரைவான வளர்நிலை என்பது மிகவும் மோசமானதாக உள்ளது."[1] நான் உலகம் முழுவதிலும் காணாமல் போயிருக்கிறேன். சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு உச்சகட்ட வேகத்தில் ஒரு முதன்மைச் சாலையில் நான் சென்று, நேரத்தை நன்கு அனுபவித்து, பின்பு நான் தவறான சாலையில் சென்றிருப்பதைக் கண்டிருக்கிறேன். நாம், மலைப்பிரசங்கத்தின் முடிவுக்கு நெருங்கி வருகையில், *ஆவிக்குரிய வகையில்* நாம் எந்த வழியில் பயணம் சென்றுகொண்டிருக்கிறோம் என்று நம்மையே கேட்டுக் கொள்ளும்படியான இயேசுவின் அறைகூவலைக் கண்டறிகிறோம். அந்தக் கேள்வியானது வேறு இரண்டு கேள்விகளுக்குப் பதில் செயல் செய்வதன் மூலம் பதில் அளிக்கப்படக் கூடும்.

### நீங்கள் பயணம் மேற்கொண்டுள்ள சாலை எது? (7:13, 14)

நீங்கள் பயணம் மேற்கொண்டுள்ள *சாலை* எது என்பது, அக்கறைக்குரிய முதல் விஷயமாக உள்ளது. மத்தேயு 7:13, 14ல் இயேசு இரு வழிகளைப் பற்றி, இரு சாலைகளைப் பற்றிப் பேசினார்:

> இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.

இவ்வசனங்களில் நாம், நான்கு மாறுபாடுகளைக் காணுகிறோம்.

#### இரு வழிகள்

பயணிக்கு இரு வழிகள் உள்ளன. ஒன்று விரிவான வழியாக உள்ளது. "விரிவும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*euruchoros* என்ற) வார்த்தை "இடவசதியான, கொள்ளக்கூடிய" என்று அர்த்தப்படுகிறது.[2] கருத்துக்களின்

பரவலான விலக்கங்களுக்கு இந்தச் சாலையில் இடமுண்டு. இது பல சந்துகளைக் கொண்டுள்ளது:

- வெற்றியிலேயே நோக்கமாயிருக்கும் கடினமாக உழைக்கும் மக்களுக்காக சந்து ஒன்றுள்ளது, மற்றும் சோம்பேறிகள் சந்தோஷத்தில் ஆட்டம்போடும் சந்து ஒன்றும் உள்ளது.
- இரட்சிப்பிற்குத் தங்கள் சொந்த நற்பண்புகளைச் சார்ந்துள்ளவர்களான ஒழுக்கரீதியான நல்லவர்களாக இருப்பவர்களுக்கு சந்து ஒன்றுள்ளது, மற்றும் ஒழுக்கவீனமான, தேவபக்தியற்ற வாழ்வை வாழ்பவர்களுக்கும் சந்து ஒன்றுள்ளது.
- மனிதரால் ஏற்படுத்தப்பட்ட தங்களின் சடங்காச்சாரங்களினால் தாங்கள் இரட்சிக்கப்படுவோம் என்று நினைக்கின்ற, மனச்சாட்சிப்படி தேவபக்தியுள்ள மக்களுக்கான சந்து ஒன்றுள்ளது, மற்றும் அவிசுவாசிகள், தேவநம்பிக்கையற்றவர்கள், லோகாதயவாதி மற்றும் நாத்திகர்கள் ஆகியோருக்கும் சந்து ஒன்றுள்ளது.

இந்தச் சாலையில் தடைகளோ, எல்லைகளோ இருப்பதில்லை. நீங்கள் விரும்பியவாறு நீங்கள் இருக்க முடியும், நீங்கள் விரும்பியவற்றை நீங்கள் செய்ய முடியும். RSV வேதாகமத்தில் "வழி சுலபமானதாக உள்ளது, இது அழிவுக்கு வழிநடத்துகிறது" என்றுள்ளது.

பின்பு இடுக்கமான வழி உள்ளது. ''இடுக்கம்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*thlibo* என்பதன் ஒரு வடிவமான) வார்த்தை "அழுத்த"[3]: ஒன்றாக அழுத்தப்பட்டிருக்க, "நெருக்கி அழுத்தப்பட்டு" இருக்க என்று அர்த்தப்படுகிறது.[4] முந்திய சாலையைப் போலின்றி, இது இடவசதி மிகுந்ததாகவோ அல்லது கொள்ளக்கூடியதாகவோ இருப்பதில்லை. ஜீவனுக்குப் போகிற சாலையை சுலபமான பாதைவழியாக இயேசு ஒருக்காலும் சித்தரித்ததில்லை.[5]

ஜீவனுக்குப் போகிற வழி இடுக்கமாக உள்ளது, ஆனால் இயேசு அவ்வாறு கூறியதால் மாத்திரம் அது அவ்வாறு இருப்பதில்லை. சத்தியத்தின் இயல்பினால் அது இடுக்கமானதாக உள்ளது. சத்தியம் எப்போதுமே இடுக்கமானதாக உள்ளது. இரண்டும் இரண்டும் எப்போதுமே நான்கையே உண்டாக்குகின்றன. அவைகள் ஐந்தையோ அல்லது ஏழையோ உண்டாக்குவதில்லை; அவைகள் எப்போதுமே நான்கையே உண்டாக்குகின்றன. அதுவே சத்தியத்தின் இடுக்கமான தன்மையாக உள்ளது. சூரியன் எப்போதுமே கிழக்கிலேயே உதிக்கிறது. அது மேற்கிலோ, வடக்கிலோ அல்லது தெற்கிலோ உதிப்பதில்லை. அது எப்போதுமே கிழக்கிலேயே உதிக்கிறது. அதுவே சத்தியத்தின் இடுக்கமான தன்மையாக உள்ளது.

சட்டபடி நாம், ''இடுக்கம்'' என்ற வார்த்தையை விரும்புவதில்லை. "குறுகிய மனம் உடையவர்" என்று அழைக்கப்பட்டிருத்தல் அவமானமானதாக உள்ளது. ஒரு ஆண்டில், கிறிஸ்தவக்கல்லூரியின் பிரசங்கமுகாம் ஒன்றில், காட்சிப்படுத்துனர் ஒருவர் ஆறு அங்குலங்கள் நீளமும் ஆனால் ஒரே ஒரு அங்குல அகலமும் கொண்ட குறிப்பேடுகளைக் கையளித்தார். அந்தக் குறிப்பேடுகளின் உச்சியில் ''குறுகிய மனம் கொண்ட மக்களுக்கான குறிப்பேடு'' என்ற வார்த்தைகள் இருந்தன. அந்த முகாமில் இருந்த எங்களில் பலர், அது "குறுகிய மனம் கொண்டவர்கள்" என்று பெயரிடப்படுவதைப் போன்று இருந்தபடியால்,

அது வேடிக்கையானதாக இருந்தது என்று நினைத்தோம்.

இன்றைய நாட்களின், கூக்குரல் சகிப்புத் தன்மைக்கானதாக இருக்கிறது. சகிப்புத்தன்மையுடன் இருக்கக் காலம் ஒன்றுள்ளது, ஆனால் சகிக்காதிருக்கவும் காலம் ஒன்றுள்ளது. ஜார்ஜ் W. பெய்லீ அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

> நாம், ஒருவர் பிறர் மீது அதிகம் சகிப்புத்தன்மை உடையவர்களாக இருப்பது அவசியமாக உள்ளது. கருத்துக்கள் பற்றி நாம் அதிகம் சகிப்புத்தன்மை கொண்டிருத்தல் அவசியமானதாக உள்ளது. ஆனால் ஒரு கருத்தில், சகியாதிருத்தல் என்பது மிகவும் நேர்த்தியானதும் கண்ணியமானதும் ஆகும். தேவன் தூஷிக்கப்படும்போது, நாம் சகியாது இருக்க வேண்டும். தேவனுடைய வசனம் கேள்விக்குள்ளாகும்போது நாம் சகியாது இருக்க வேண்டும். விசுவாசம் தாக்கப்படும்போது, சொந்த கருத்தானது சத்தியத்திற்குப் பதிலியாக்கப்படும்போது, தெய்வீக சத்தியங்கள் ஏளனம் செய்யப்படும்போது, நாம் சகியாதிருக்க வேண்டும்.[6]

ஜீவனுக்குப் போகிற வழி இடுக்கமானதாக இருக்கலாம், ஆனால் அது போதிய அளவுக்கு விசாலமானதாக உள்ளது. அது - இயேசுவைப் பின்பற்ற விரும்புகிற அனைத்து மக்களையும் (காண்க 1 யோவான் 1:7) - "எல்லாத் தலைமுறைகள், எல்லாக் காலங்கள், எல்லா மொழிகள் மற்றும் பிறப்பிட மொழிகள், எல்லா மக்களினங்கள் மற்றும் நாடுகள் ஆகியவற்றின் எல்லா மக்களையும்"[7] உள்ளடக்கப் போதிய அளவுக்கு விசாலமானதாக உள்ளது (காண்க கொலோசெயர் 2:6). அது அவரது வழியாக உள்ளது (காண்க யோவான் 14:6).

விரிவான வழி மற்றும் இடுக்கமான வழி - இவைகள் மாத்திரமே நமது விருப்பத் தேர்வுக்கு உரியவைகளாக உள்ளது. அந்தத் தேர்வை உலகம் விரும்புவதில்லை. சிலர் "பல பாதைகள் ஜீவனுக்கு வழிநடத்துகின்றன" என்று கூறுகின்றனர். மற்றவர்கள், மனிதத்துவம் எல்லாவற்றையும் ஒன்றாக்கி, உண்மையில் ஒரே ஒரு சாலையே உள்ளது - அதாவது எல்லாருமே நித்திய இரட்சிப்பின் சாலையில் இருக்கிறோம் - என்று கூறுகின்றனர். இருப்பினும் இயேசு, மனிதர்கள் மிகவும் விரும்புகிற அந்த விருப்பத் தேர்வுகளை அளிக்கவில்லை, அவர் - விரிவான ஒன்றும் இடுக்கமான ஒன்றுமாக - இரு வழிகள் உள்ளன என்றார் மற்றும் ஒவ்வொரு தனிநபரும் ஒன்று அல்லது மற்ற வழியில் இருக்கிறார் என்று அவர் கூறினார்.

### இரு வாசல்கள்

அடுத்ததாக இயேசு, இரண்டு வாசல்கள் உள்ளன என்று கூறினார். *விரிவான வாசல்* உள்ளது. நமது வேதபாட வசனப்பகுதியின்படி, இரு வாசல்களுமே "பிரவேசிக்கப்பட" வேண்டியவைகளாக உள்ளன, ஆனால் இந்த வாசலானது, பெரும்பான்மையானவர்கள் இதின் வழியாகப் பிரவேசிக்கும்போது வாசல் இருப்பதை அறியாதிருக்கும் அளவுக்கு மிக விரிவானதாக உள்ளது. நீங்கள் இந்த நுழைவாயிலில் நிற்க முடிந்தால், இடது மற்றும் வலது புறங்களில் நீங்கள் வெகு தொலைவிற்குக் கண்ணோக்க முடியும், மற்றும் ஒருக்காலும் நீங்கள் வாசல்கால்களைக் காண மாட்டீகள்.

இந்த வாசலில் நுழைதல் என்பது கடினமாக இருப்பதில்லை, மற்றும் நீங்கள் இதின்வழியாக நுழையும்போது நீங்கள் எடுத்துச் செல்லக் கூடிய "சுமைகளின்" அளவுக்கு வரையறை எதுவும் இருப்பதில்லை. நீங்கள் எதையும் பின்வைத்து விட்டுச் செல்ல வேண்டியதில்லை. நீங்கள் உங்கள் பாவத்துடனும் சுயநலத்துடனும், உங்கள் சுயநீதியுடனும், உங்கள் மேட்டிமையுடனும் முன் அனுமானங்களுடனும் இதற்குள் வர முடியும்.

பின்பு சிறிய, இடுக்கமான வாசல் உள்ளது. இதை KJV வேதாகமம், "the strait gate" என்று அழைக்கிறது. நம்மில் பலர், நித்திய ஜீவனுக்குச் செல்லும் வழியானது "நேரான [strait] மற்றும் குறுகலான" வழி என்று குறிப்பிடப்பட்டுள்ளதைக் கேள்விப்பட்டு இருக்கிறோம். இருப்பினும் KJV வேதாகமத்தில் "s-t-r-a-i-g-h-t" என்பதல்ல, ஆனால் "s-t-r-a-i-t" என்பதே பயன்படுத்தப்பட்டுள்ளது. "Strait" என்பது "குறுகலான" என்று அர்த்தப்படும் இலத்தீன் வார்த்தையில் இருந்து வந்துள்ளது. இன்றைய நாட்களில் இவ்வார்த்தை, இரு பெரிய கடல்களை இணைக்கும் - மத்தியதரைக் கடலை அட்லாண்டிக் இணைக்கும், ஜிப்ரால்டர் ஜலசந்தி போன்ற - ஒரு குறுகிய ஜலசந்தியைக் குறிப்பதில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது.

13ம் வசனத்தில் உள்ள *stenos* என்ற கிரேக்க வார்த்தை, "குறுகிய" என்று அர்த்தப்படுகிறது.[8] இவ்வார்த்தை, 14ம் வசனத்தில் "இடுக்கம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த வாசல் சிறியதாக இருப்பதால், இதன் வழியே நீங்கள் தற்செயலாகச் சாவகாசமாக நடந்து செல்ல முடியாது. இது தவறவிடப்பட சுலபமானதாக உள்ளது; நீங்கள் இதற்காகக் கண்ணோக்க வேண்டும். இது தற்செயல் நிகழ்வினால் அல்ல, ஆனால் தெரிவினால் பிரவேசிக்கப்படுகிறது. இந்த வாசல் குறுகியதாக இருப்பதால், ஒரு வேளையில் ஒரு நபர் மாத்திரமே பிரவேசிக்க முடியும். விரிவான வாசல் வழியாக, கும்பலில் ஒருவராகப் பிரவேசித்து விட முடியும், ஆனால் குறுகிய வாசலில் ஒருவர் பின் ஒருவராக மாத்திரமே பிரவேசிக்க முடியும். மேலும் இது குறுகியதாக இருப்பதால், நீங்கள் இதற்குள் பிரவேசிக்க வேண்டுமென்றால், உங்கள் தனிப்பட்ட "சுமைகள்" பலவற்றை இறக்கி வைத்துவிட்டுச் செல்ல வேண்டி இருக்கும்.[9] இயேசு தமது சீஷர்களிடத்தில் "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், *அவன் தன்னைத் தான் வெறுத்து,* தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்று கூறினார் (மத்தேயு 16:24; வலியுறுத்தம் கூட்டப்படுகிறது).

வேறொரு இடத்தில் இயேசு, ஜீவனுக்குப் போகிற வாசலில் பிரவேசிப்பது எப்படி, கிறிஸ்தவராவது எப்படி என்று வெளிப்படுத்தினார். இரட்சிப்பின் நிபந்தனை ஒவ்வொன்றிலும், கடந்த காலத்தில் இருந்தவற்றில் சிலவற்றை விட்டுவிடுதல் உள்ளடங்கி இருக்கிறது.

நாம் இயேசுவில் *விசுவாசம் கொள்ள வேண்டும்* (யோவான் 8:24). மற்ற ஏதேனும் இரட்சகரில் விசுவாசம் கொள்ள விரும்புகிறவர்களுக்கு இந்த வாசல் மிகவும் குறுகியதாக உள்ளது.

நாம் நமது பாவங்களில் இருந்து *மனந்திரும்ப வேண்டும்* (லூக்கா 13:3). தங்கள் பழைய வாழ்வு நடையைக் காத்துக் கொள்ளத் தீர்மானித்து இருப்பவர்களுக்கு இந்த வாசல் மிகவும் குறுகியதாக உள்ளது.

மனிதர்களுக்கு முன்பாக அவருடைய நாமத்தை நாம் *அறிக்கையிட*

*வேண்டும்* (மத்தேயு 10:32). இயேசுவிற்காக வெளிப்படையாக நிலைப்பாட்டை மேற்கொள்ளத் தயங்குகிறவர்களுக்கு இந்த வாசல் மிகவும் குறுகியதாக உள்ளது.

இரட்சிக்கப்படுவதற்கு நாம் ஞானஸ்நானம் பெற (தண்ணீருக்குள் முழுக்காட்டப்படுதல்) வேண்டும் (மாற்கு 16:16). அவருக்குக் கீழ்ப்படிய மனமில்லாதவர்களுக்கு இந்த வாசல் மிகவும் குறுகியதாக உள்ளது. இயேசு, "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (யோவான் 14:15).

இது கிறிஸ்துவின் வழியாக உள்ளது என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். அவர், "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்" என்று கூறினார் (யோவான் 10:9அ). இதில் பிரவேசியாது இருக்கிற யாவருக்கும் அவர், வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! "நீங்கள் எல்லாரும் *என்னிடத்தில்* வாருங்கள்; *நான்* உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று கூறுகிறார் (மத்தேயு 11:28; வலியுறுத்தம் கூட்டப்படுகிறது). இந்த வாசல் சிறியதாகவும் குறுகியதாகவும் உள்ளது, ஆனால் கர்த்தரிடத்தில் வர மனவிருப்பமாக உள்ள எவருக்கும் இது போதிய அளவு பெரியதாகவும் போதிய அளவு விசாலமாகவும் உள்ளது.

### இரு கூட்டங்கள்

நமது வேதபாட வசனப்பகுதி இரு கூட்டங்களை, மக்களின் இரு குழுவைப் பற்றியும் பேசுகிறது. ஒன்று *"அநேகர்"* என்று அழைக்கப்படுகிற குழுவாக உள்ளது: "விரிவான வாசல் வழியாய்ப்" "பிரவேசிக்கிறவர்கள் அநேகர்," "அநேகர்" விசாலமான வழியில் உள்ளனர். விசாலமான வழி என்பது திரளான மக்கள் கூட்டத்தின் வழியாக உள்ளது, இது மக்கள் திறளின் வழியாக உள்ளது. "இதை ஒவ்வொருவரும் செய்கின்றனர்" என்பது இந்தக் சாலையின் நோக்கமாக உள்ளது. மோசே இஸ்ரவேல் மக்களுக்கு அறிவுறுத்தியபோது அவர், "தீமைசெய்ய திரளானபேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக" என்று கூறினார் (யாத்திராகமம் 23:2அ). அவர் அந்தக் கட்டளையைக் கொடுக்க வேண்டியிருந்தது ஏன்? ஏனென்றால் மக்கள் கூட்டத்தைப் பின்பற்றுதல் என்பது செய்வதற்கு "இயல்பான" விஷயமாக உள்ளது.

"அநேகர்" என்று அழைக்கப்படுகிற குழுவிற்கு நேரெதிரான வகையில் *"சிலர்"* என்று அழைக்கப்படுகிற குழு உள்ளது. இயேசு, "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்று கூறினார். "அநேகமாக இதுவே (இயேசுவின்) கூற்றுக்களில் மிகவும் புறக்கணிக்கப்பட்டதாக உள்ளது" என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.[10]

"சிலர்" என்ற சொற்றொடர் ஒரு ஒப்பீட்டுச் சொற்றொடராக உள்ளது. நீண்ட நாட்களுக்கு முன்னர் நான், இரட்சிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையைக் குறுக்கிக் கணக்கிட்ட ஒரு மனிதரைப் பற்றிய பாடல் ஒன்றைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். அதன் முடிவு வரிகள் பின்வருவன போலச் சென்றன: "அது என்னையும் உங்களையும் விட்டுவைக்கிறது. சில வேளைகளில் நான் உங்களைப் பற்றி நிச்சயமாகக் கூறுவதற்கில்லை." "சிலர்" என்பது "ஏறக்குறைய எவருமில்லை" என்று அர்த்தப்படுவதாக நாம் நினைத்துவிடக் கூடாது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில், இரட்சிக்கப்படுகிறவர்கள்

“ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள்” என்று சித்தரிக்கப்பட்டுள்ளனர் (7:9). இருந்தபோதிலும் இந்த விசேஷித்த குழுவானது, விரிவான வாசல் வழியே செல்லுகிற பலருடன் ஒப்பிடப்படுகையில் இன்னமும் *சார்பளவில்* சிலர் என்பதாகவே உள்ளது.

விசுவாசம் நிறைந்தவர்களாக இருப்பவர்கள் எப்போதுமே சிறுபான்மையினராகவே இருந்துள்ளனர். நோவாவின் நாட்களில், “சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம்” காக்கப்பட்டார்கள் (1 பேதுரு 3:20). யுத்தம் செய்யத் தக்கவர்களான “ஆறுலட்சம் புருஷர்கள்” எகிப்தில் இருந்து புறப்பட்டனர் (காண்க யாத்திராகமம் 12:37); இந்த எண்ணிக்கையில் இருவர் மாத்திரமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசித்தனர்: யோசுவா மற்றும் காலேப். பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலுமே, “மீதியாயிருப்பவர்கள்” மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள் என்று முன்னுரைக்கப்பட்டுள்ளது (காண்க ஏசாயா 10:21, 22; ரோமர் 11:5). இயேசு ஒரு உவமையைப் பின்வரும் வார்த்தைகளுடன் முடித்தார்: “அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப் பட்டவர்களோ சிலர்” (மத்தேயு 22:14). இன்றைய நாட்களில், தேவனுடைய மக்கள் இன்னமும் சிறுபான்மை மக்களாகவே உள்ளனர்.

“ஒவ்வொருவரும் தேவனைப் பிரியப்படுத்த மாட்டார்கள்” என்பதே மத்தேயு 7ம் அதிகாரத்தின் செய்தியாக உள்ளது என்று என் சகோதரர் காய் அவர்கள் கூறியிருக்கிறார்.[11] உலகமானது இதை விசுவாசிக்க விரும்புவதில்லை. யாரேனும் ஒருவர் - நல்லவரோ அல்லது கெட்டவரோ, யாரேனும் ஒருவர் - எந்த வேளையில் இறந்தாலும் அவர் அன்பான மக்கள் தம்மை வாழ்த்தக் காத்திருக்கும் “வெளிச்சத்தினுள் செல்கிறார்” என்பது உலகில் நான் வாழும் பகுதியில் இன்றைய நாட்களில் பிரபலமாக உள்ள ஒரு நம்பிக்கையாக இருக்கிறது. விஷயம் அப்படி இருப்பதில்லை என்று இயேசு கூறினார். அவரைப் பொறுத்த மட்டில், வெளிச்சத்தின் வட்டாரத்திற்குள் முன்னோக்கிச் செல்பவர்களைக் (வெளிப்படுத்தின விசேஷம் 22:5) காட்டிலும் அதிகமானவர்கள் “புறம்பான இருளின்” வட்டாரத்திற்குள் தள்ளப்பட முன்னோக்கிச் செல்கின்றனர் (மத்தேயு 8:12; 22:13; 25:30).

“சிலரில்” ஒருவராக இருத்தல் என்பது தைரியம் இழக்கச் செய்வதாக இருக்கலாம். சபையின் உறுப்பினர்கள், “ஆனால் இந்தக் கருத்தின் மீது வேதாகமம் தெளிவாக உள்ளதே. *ஒவ்வொருவரும்* இதைக் காண இயலாதது ஏன்?” என்று கேட்பதைக் கேள்விப் பட்டிருக்கிறேன். அந்தக் கேள்விக்கு என்னால் பதில் கூற இயலாது, ஆனால் அவ்வாறே இருக்கும் - அதாவது ஒவ்வொருவரும் சத்தியத்தைக் காணவோ அல்லது புரிந்துகொள்ளவோ அல்லது அதற்குக் கீழ்ப்படியவோ *மாட்டார்கள்* - என்று கர்த்தர் கூறினார். அது அவ்வாறே உள்ளது. இடுக்கமான வழி என்பது கட்டுப்படுத்தப்பட்ட வழியாக உள்ளது, மற்றும் இது அடிக்கடி ஒரு சிரமமான வழியாக உள்ளது. இது தனிமையான வழியாகவும் இருக்கக் கூடும். யாரேனும் ஒருவர், “ஒரு நிமிடம் பொறுங்கள், அந்த வழியில் உள்ள ஒருசிலரில் ஒருவனாக/ஒருத்தியாக இருக்க நான் விரும்புகிறேனா என்பதை நிச்சயமாகக் கூற இயலவில்லை!” என்று யாரேனும் ஒருவர் கூறலாம். அந்த முடிவை மேற்கொள்வதற்கு முன்னர், நான்காவது வேறுபாட்டை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

## இரு அடைவிடங்கள்

விசாலமான வழியானது "கேட்டுக்குப் போகிறதாக" உள்ளது. "கேடு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*apollumi* என்பதில் இருந்து வருகிற) வார்த்தை, "முற்றிலுமாக அழிக்க" என்று அர்த்தப்படுகிறது; ஆனால் "... நிர்மூலமாகுதல் என்பதல்ல ஆனால் அழிதல், இழத்தல், இராதிருத்தல் அல்ல ஆனால் நன்றாக இராதிருத்தல் என்பதே கருத்தாக உள்ளது."[12] இந்த வாழ்க்கையில் ஒருவர் பண்பின் இழப்பை அனுபவிக்கலாம். இந்த வாழ்விற்குப் பின்னர் அது ஆத்துமாவின் இழப்பாக உள்ளது. சாலொமோன், "மனுஷனுக்கு செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" என்று எழுதினார் (நீதிமொழிகள் 14:12; காண்க 16:25). "மரணம்" என்ற வார்த்தை "பிரிதல்" என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. ஆவிக்குரிய மரணம் என்பது தேவனை விட்டுப் பிரிதலாக உள்ளது (காண்க ஏசாயா 59:2). "இரண்டாம் மரணம்" (வெளிப்படுத்தின விசேஷம் 20:14; 21:8) என்பது தேவனுடைய பிரசன்னத்தில் இருந்து நித்தியத்திற்கும் பிரிந்திருத்தலாக உள்ளது (2 தெசலோனிக்கேயர் 1:8, 9). நெருக்கமான வழியில் செல்லத் தொடங்குகையில் செலுத்தப்பட வேண்டிய விலையினிமித்தம் அது கடினமாக இருப்பதாகப் பலர் நினைக்கின்றனர், ஆனால் இது, விசாலமான வழியில் பிரவேசிப்பவர்களால் முடிவில் செலுத்தப்படும் விலையுடன் ஒப்பிடுகையில் ஒன்றுமில்லை என்பதாகவே உள்ளது.

விசாலமான வழி அழிவுக்கு இட்டுச் செல்கிறது, ஆனால் நெருக்கமான வழி "ஜீவனுக்கு இட்டுச் செல்கிறது." இயேசு, "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்று கூறினார் (யோவான் 10:10ஆ). தேவனிடத்தில் இருந்து பிரிதல் என்பது ஆவிக்குரிய மரணமாக இருக்கிறது என்றால், தேவனுடன் இணைதல், அவருடன் ஐக்கியம் கொண்டிருத்தல் என்பது ஆவிக்குரிய ஜீவனாக உள்ளது. யோவான் 17ல் இயேசு தமது மாபெரும் ஜெபத்தில், "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" என்று கூறினார் (வசனம் 3). நெருக்கமான வழியில், தேவனுடனும் கிறிஸ்துவுடனும் ஐக்கியம் தொடங்குகிறது. இது பரலோகத்தில் பூரணமாகிறது.

கர்த்தருக்குக் கீழ்ப்படியும்படி மக்களை அசைப்பதற்கு நாம், எதிர்மறை ஊக்குவிப்பையா அல்லது நேர்மறை ஊக்குவிப்பையா, எதைப் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றிய கலந்துரையாடலைச் சிலவேளைகளில் நாம் கேள்விப்படுகிறோம். இயேசு இவ்விரண்டையுமே பயன்படுத்தினார். அழிவுக்கு இட்டுச் செல்லும் வழியைச் சுட்டிக்காட்டிச் செயல்விளைவில் அவர், "நீங்கள் அந்த வழியில் இருக்க *விரும்புவதில்லை*" என்று கூறினார். பின்பு ஜீவனுக்கு இட்டுச் செல்கிற வழியைச் சுட்டிக்காட்டி, "நீங்கள் அந்த வழியில் இருக்க *விரும்புகிறீர்கள்*" என்று குறிப்பிட்டார்.

நாம் நான்கு வேறுபாடுகளை, ஆனால் இரண்டு தெரிவுகளை மாத்திரம் கொண்டிருக்கிறோம்: ஒன்று ஜீவனுக்கு இட்டுச் செல்கிற நெருக்கமான வழி அல்லது அழிவுக்கு இட்டுச் செல்கிற விசாலமான வழி. ஜான் R. W. ஸ்டாட் அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

> ... இயேசுவைப் பொறுத்த மட்டில் இரு வழிகள் மாத்திரமே உள்ளன, கடினமானது மற்றும் சுலபமானது (இடைவழி என்று எதுவும்

*இருப்பதில்லை), இவைகள் விரிவான மற்றும் நெருக்கமான இரு வாசல்களின் மூலம் பிரவேசிக்கப்படுகின்றன (வேறு வாசல் இல்லை), இவைகள் பெரிய மற்றும் சிறிய என்று இரு கூட்டத்தினரால் மிதித்து நடக்கப்படுகின்றன (நடுநிலைக் குழு என்று எதுவும் இருப்பதில்லை), இவைகள் அழிவு மற்றும் ஜீவன் என்ற இரு அடைவிடங்களில் முடிகின்றன (மூன்றாவது மாற்று இடம் என்று எதுவும் இருப்பதில்லை).*[13]

## *நீங்கள் யாருடைய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகிறீர்கள்? (7:15-20)*

"நீங்கள் பயணம் மேற்கொண்டுள்ள வழி எது?" என்ற கேள்விக்குப் பதில் அளிக்க, நீங்கள் எந்தச் சாலையில் பயணம் செய்கிறீர்கள் என்று நீங்கள் முதலில் அறிந்திருத்தல் அவசியமாக உள்ளது. இருப்பினும், இரண்டாவது ஆழ்ந்த சிந்தனை ஒன்றுள்ளது: நீங்கள் யாருடைய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகிறீர்கள்? வழிகாட்டுபவராக இயேசு ஒருவர் மாத்திரம் இருப்பதில்லை. "இங்கு செல்லுங்கள் மற்றும் அங்கு செல்லுங்கள். இதைச் செய்யுங்கள் மற்றும் அதைக் செய்யுங்கள்" என்று எண்ணற்ற குரல்கள் உரத்து சத்தமிடுகின்றன. ஆகவே இயேசு, இரு வழிகளைப் பற்றிய தமது போதனையைத் தொடர்ந்து, மற்றவர்களை கேட்டுக்கு இட்டுச் செல்பவர்களைப் பற்றிய எச்சரிக்கையைக் கொடுத்தார்.

**வழிகாட்டுபவர்களின் இரு வகைகள்**

இரு வழிகள் இருப்பது போன்றே, வழிகாட்டுபவர்களில் இரு வகையினர் உள்ளனர். [நமது] வேதபாட வசனப்பகுதி மோசமான வழிகாட்டுபவர்களை மாத்திரம் குறிப்பிடுகிறது, ஆனால் நல்ல வழிகாட்டுபவர்களும் உள்ளனர் என்று அதன்மூலம் மறைமுகமாய் உணர்த்துகிறது.

வழிகாட்டுபவர்கள் "தீர்க்கதரிசிகள்" என்று அழைக்கப்படுகின்றனர். "தீர்க்கதரிசி" என்று பொருள்படுகிற "prophet" என்ற ஆங்கில வார்த்தை (*prophetes* என்ற) கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது, "இது [ஒருவரின்] சார்பாகப் பேசுகிறவர்" என்று அர்த்தப்படுகிறது.[14] பொதுவாக இது தேவனுக்காக "பேசுகிற" ஒருவரை, தேவனுடைய பேச்சாளரைக் குறிக்கிறது. இவர்கள் முதல் நூற்றாண்டில், தேவனிடத்தில் இருந்து நேரடியாகத் தங்கள் செய்திகளைப் பெற்றுக்கொண்ட பேச்சாளர்களாக இருந்தனர்; ஆனால் [பிற்பாடு] இவர்கள், தேவனுடைய எழுதப்பட்ட வசனத்தில் இருந்து தங்கள் செய்தியைப் பெற்றுக்கொள்கிற போதகர்களைக் கொண்டு இடம் மாற்றப்பட்டனர்.[15] தீமோத்தேயுவுக்குப் பவுல் கூறிய பின்வரும் அறிவுரையைப் பின்பற்றுகிற போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்காகத் தேவனுக்கு நன்றி: "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்தி சொல்லு" (2 தீமோத்தேயு 4:2)!

"கள்ளப் போதகர்கள்" என்று இயேசு அழைத்தவர்களான, *மோசமான வழிகாட்டுபவர்களும்* உள்ளனர் என்பது கவலைக்குரியது. இவர்கள்

தேவனுக்காகப் பேசுவதாக, ஒருவேளை தேவனால் ஏவப்பட்டு இருப்பதாகக் கூட உரிமை கோரினர். இவர்களைப் பற்றி இயேசு பின்வருமாறு கூறினார்,

> *கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் (மத்தேயு 7:15).*

"கள்ள" என்ற வார்த்தை, "பொய்பேசுதல்" என்பதற்கான (*pseudes* என்ற) கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது.[16] நம்மை வஞ்சிக்கும் பொய்யுரைக்கிற தீர்க்கதரிசிகளைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இயேசு கூறினார்.

உங்கள் வீட்டில் நட்புறவான பூனை ஒன்றை மாத்திரமே நீங்கள் கொண்டிருக்கையில், "நாய்கள் ஜாக்கிரதை!" என்ற விளம்பரப் பலகையை உங்கள் வாசல்கதவில் வைத்தலில் அர்த்தம் எதுவும் இருப்பதில்லை.[17] கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு கூறினார் என்ற உண்மையானது, அவரது நாட்களில் அவர்கள் இருந்தனர் என்று சுட்டிக்காண்பிக்கிறது - மற்றும் அவர்கள் எப்போதுமே இருப்பார்கள் என்றும் மறைமுகமாக உணர்த்துகிறது. மலைப்பிரசங்கத்தை இயேசு பிரசங்கித்தபோது, அவர் வேதபாரகர்களையும் பரிசேயர்களையும் தமது சிந்தையில் கொண்டு இருந்திருக்கலாம்; ஆனால் கள்ளப் போதகர்கள் என்போர் அந்தக் குழுக்களுடன் தொடங்கவோ அல்லது முடியவோ இல்லை. பிற்பாடு இயேசு, எருசலேமின் அழிவுக்கு முன்னர் நடப்பது என்ன என்பதைப் பற்றிப் பேசியபோது அவர், "அநேகங்கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்" என்று கூறினார் (மத்தேயு 24:11; காண்க வசனங்கள் 5, 24). "ஒரு வித்தியாசமான சுவிசேஷத்தைக்" கொண்டுவந்த கள்ளப் போதகர்களைப் பற்றிப் பவுல் எழுதினார் (கலாத்தியர் 1:6-9). அவர் 2 தீமோத்தேயு நிருபத்தில் இரு கள்ளப் போதகர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்கள் "சத்தியத்தை விட்டு விலகி" சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போட்டார்கள் என்று கூறினார் (2:17, 18). கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு, "கள்ளத்தீர்க்கதரிசிகளும் [யூத] ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, ..." என்று கூறினார் (2 பேதுரு 2:1அ).

பல கள்ளப் போதகர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்பவர்களாக இருக்கின்றனர் (காண்க 7:21-23), ஆனால் சிலர் அவ்வாறு இருப்பதில்லை. எவரொருவரும் வேண்டுமென்றே கள்ளப் போதகராக இருப்பது ஏன்? என்னால் மனங்களை வாசிக்கவோ அல்லது நோக்கங்களைக் கண்டறியவோ இயலாது, ஆனால் பல சாத்தியக்கூறுகள் மனதிற்கு வருகின்றன.

*ஊதியம்/கூலி.* (Pay.) சில போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் KJV வேதாகமத்தில் உள்ள சொற்றொடரைப் பயன்படுத்துவதென்றால், வெறும் "கூலியாள்" ஆக இருக்கின்றனர் (காண்க யோவான் 10:12, 13): கூலிக்காக ஒரு வேலையைச் செய்கிற தனிநபர்கள். KJV வேதாகமத்தில் உள்ள சாதகமற்ற இன்னொரு விவரிப்பு மனதிற்கு வருகிறது: "அவர்களுடைய தேவன் வயிறு" (பிலிப்பியர் 3:19).

*கௌரவம்.* (Prestige.) தொடக்க கால சபையில் சிலர், போதகர்களாக

இருத்தல் கனத்தையும் கௌரவத்தையும் கொண்டுவரும் என்று நினைத்த காரணத்தினால், அவ்வாறு அறியப்பட விரும்பினர். யாக்கோபு பின்வரும் எச்சரிக்கையைக் கொடுத்தார்: "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" (யாக்கோபு 3:1).

அதிகாரம். (Power.) தியோத்திரேப்பு போன்ற சிலர் சபைக்குழுமத்தில் "முதன்மையாயிருக்க" விரும்புகின்றனர் (3 யோவான் 9). அவர்கள் தங்களின் மனவிருப்பத்தை மற்றவர்களிடம் திணிக்க விரும்புகின்றனர்.

சுயவஞ்சனையோ அல்லது வேண்டுமென்றே செய்தலோ, நோக்கம் எதுவாக இருப்பினும், கள்ளப் போதகர்களைப் பற்றிய இரு விஷயங்களை நமது வேதபாட வசனப்பகுதி நமக்குக் கூறுகிறது. முதலாவது அவர்கள் *அபாயகரமானவர்களாக* இருக்கின்றனர். அவர்களை இயேசு, "ஓநாய்கள்" என்று அழைத்தார். சபையானது தேவனுடைய மந்தையாக உள்ளது (நடபடிகள் 20:28), மற்றும் ஓநாய்கள் ஆடுகளின் இயற்கையான விரோதிகளாக உள்ளன (யோவான் 10:12, 13). இரத்ததாகம் கொண்ட இந்த ஊண் உண்ணிகளுக்கு எதிராக ஆடுகள் பலமற்றவையாக உள்ளன. எபேசுவில் இருந்த மூப்பர்களைப் பவுல், "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்" என்று எச்சரித்தார் (நடபடிகள் 20:29). இவர்களை இயேசு, "பட்சிக்கிற ஓநாய்கள்" என்று அழைத்தார்: பைத்தியம் பிடிக்கும் அளவுக்குப் பசியாக இருக்கும் ஓநாய்கள். அவற்றை உங்கள் மனதில் உங்களால் சித்தரிக்க முடிகிறதா: ஊளையிடுகிற, கண்குறுக்கிய, பற்களை வெளியே நீட்டிய, எச்சில் ஒழுகுகிற, தாக்குவதற்குத் தயாராக உள்ள ஓநாய்களின் கூட்டம்?

கள்ளப் போதகர்கள் அபாயமானவர்களாக இருப்பது மாத்திரமின்றி, அவர்கள் *வஞ்சிப்பவர்களாகவும்* இருக்கின்றனர். அவர்கள் அடிக்கடி, "ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு" வருகின்றனர். ஆட்டுத்தோல் என்பது தீர்க்கதரிசியின் போர்வைக்கான/சால்வைக்கான குறிப்பாக இருந்தது என்று சிலர் யூகித்துள்ளனர் (1 இராஜாக்கள் 19:19). இருப்பினும் இயேசு அனேகமாக, பட்சிக்கிற ஓநாய்கள் எப்போதுமே பட்சிக்கிற ஓநாய்களைப் போன்று காணப்படுவதில்லை என்று அர்த்தப்படும் பழமொழிச் சொல்விளக்கத்தை மாத்திரம் பயன்படுத்தி இருக்கலாம். அடிக்கடி அவைகள் ஆடுகளைப் போலக் காணப்படுகின்றன: தீங்கற்ற மற்றும் அச்சுறுத்தலற்ற உயிரினங்கள். கள்ளப் போதகர்கள் தங்களை "கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தை" மற்றும் "நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தை" கொண்டு தங்களை மறைத்துக் கொள்ளக் கூடியவர்களாக உள்ளனர் என்று பவுல் கூறினார் (2 கொரிந்தியர் 11:13, 15).

கள்ளப் போதகர்கள் தங்கள் வருகையை, "இங்கே ஒரு கள்ளப் போதகர் வருகிறார்!" என்ற வார்த்தைகளைக் கொண்டு அறிவிப்பதில்லை. அவர்கள் தங்கள் கழுத்துகளைச் சுற்றி அடையாளங்களையோ அல்லது தங்கள் மார்பில் "கள்ளப் போதகர்" என்று அறிவிக்கும் பட்டிகளையோ அணிந்து கொள்வதில்லை. அவர்கள் பொதுவாகச் சரியான உடைகளையே அணிகின்றனர். அவர்கள் மதரீதியான வார்த்தை வளம் கொண்டுள்ளனர். அவர்களால் வேதவசனங்களை மேற்கோள் காண்பிக்க முடியும்.[18] அவர்கள் சரியான வார்த்தைகளைப் பேசுவதாகக் காணப்படலாம்.[19] இவையாவும் அவர்களை

இன்னும் அதிக அபாயமுள்ளவர்கள் ஆக்குகின்றன. மக்களில் மிகச்சிறந்தவர்கள் மீது நம்பிக்கை கொள்ளும்படி கிறிஸ்தவர்கள் போதிக்கப்பட்டுள்ளனர், மற்றும் இது அவர்களைக் கள்ளப் போதகர்களின் தாக்குதலுக்கு உட்படுபவர்களாக விட்டுவிட முடியும். யூதா, குறிப்பிட்ட சில கள்ளப்போதகர்களைப் பற்றி எழுதியபோது, அவர்கள் "பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்" என்று அவர் எழுதினார் (யூதா 4). "பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்" என்பது "பக்க வழியாய் நுழைதல்" என்று அர்த்தப்படுகிற *pareisduno* என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[20] யாரோ ஒருவர், அவர்கள் "ஓரத்துக் கதவின் மூலம்" இரகசியமாய் வந்துள்ளனர் என்று கூறினார்.[21]

## கள்ளப்போதகர்களை அடையாளம் காண்பது எப்படி

கள்ளப் போதகர்கள் இவ்வளவாக வஞ்சனை உடையவர்களாக இருந்தால், நாம் அவர்களைச் சாத்தியக்கூறான வகையில் அடையாளம் காண்பது எப்படி?[22] எப்படி என்பதை இயேசு அடுத்த பகுதியில் நமக்குக் கூறினார். மேய்ச்சல் நிலம் என்பதில் இருந்து கனித்தோட்டம் என்பதற்குத் தமது ஒப்புவமையை மாற்றிக் கொண்டு, "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" என்று அவர் கூறினார் (வசனம் 16அ; காண்க வசனம் 20). "அறிவீர்கள்," *epiginosko*, என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, *epi* என்ற முன்னிடைச் சொல்லினால் வலிவூட்டப்பட்ட "அறிதல்," *ginosko* என்ற வார்த்தையாக உள்ளது. இது "முழுமையாக அறிதல்" என்று அர்த்தப்படுகிறது.[23] வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், கள்ளத்தீர்க்கதரிசிகளின் கனிகளை உற்றுநோக்குதலே அவர்களை உண்மையில் அடையாளம் காண்பதற்கான வழியாக உள்ளது.

இயற்கையில் கனி சோதனையை மக்கள் எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்று இயேசு குறிப்பிட்டார்: "முட்செடிகளில் திராட்சைப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?" (வசனம் 16ஆ). "புல்வெளிக்குச் சென்று திராட்சைப் பழங்களைப் பறிக்கும் மக்கள் அல்லது முட்புதரில் அத்திப்பழங்கள் பறிப்பதற்காகத் தங்கள் கூடையை எடுத்துச் செல்லும் மக்கள் பற்றி உங்களால் கற்பனை செய்ய முடியுமா?"[24]

தொடர்ந்து அவர் பின்வருமாறு கூறினார்,

> அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது (வசனங்கள் 17, 18).

"நல்ல மரம்" என்பது ஒரு கனிமரம் செய்ய வேண்டிய பணியைச் செய்யும் மரமாக உள்ளது: உண்ணத் தக்க கனியை உண்டாக்குதல். "கெட்ட மரம்" உண்ணத்தக்க கனியை உண்டாக்குவதில்லை.[25] இது, ஒரு நல்ல மரம் உண்ணத்தகாத கனியை *ஒருக்காலும்* உண்டாக்குவதில்லை என்று அர்த்தப்படுவதில்லை. ஒரு நல்ல ஆப்பிள் மரத்தில், புழுக்கள் கொண்ட ஒரு சில ஆப்பிள் பழங்கள் இருக்கக்கூடும். அதைப்போன்றே, ஒரு கெட்ட மரம் அவ்வப்போது தனது கிளைகளில் இருந்து தொங்குகிற நல்ல பழங்கள் சிலவற்றைக் கொண்டிருக்கவும் கூடும். ஒவ்வொரு

மரத்தினாலும் உண்டாக்கப்படும் கனியின் பொதுவான பண்பை இயேசு தமது சிந்தையில் கொண்டிருந்தார்.

கனிச்சோதனையை நமக்குப் போதிப்பவர்களுக்கு நாம் எவ்வாறு நடைமுறைப்படுத்த இயலும்? அவ்வாறு செய்வதற்கு நாம், "கனியின்" பல் வேறு வகைகள் உள்ளன மற்றும் "கனிச்சோதனையின்" பல்வேறு வகைகள் உள்ளன என்பதைப் புரிந்து கொள்வது அவசியமாகிறது. எடுத்துக்காட்டாக, *உபதேச* சோதனை உள்ளது: ஒருவர் எதைப் *போதிக்கிறார்*. எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் இருந்து ஒரு சொற்றொடரைக் கடனாகப் பெறுவது என்றால், நாம் அவரது உதடுகளின் கனியை ஆய்வு செய்வது அவசியமாக உள்ளது (காண்க எபிரெயர் 13:15). யோவான், தமது வாசகர்களை வஞ்சிக்க முயற்சி செய்யும் சிலரைப் பற்றி எழுதினார் (காண்க 1 யோவான் 2:26) மற்றும் பின்பு அவர், "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" என்று கூறினார் (1 யோவான் 4:1).[26] அவர்களை எவ்வாறு சோதித்தறிவது? அவர்கள் போதிப்பவற்றைத் தேவனுடைய ஏவுதல் பெற்ற சத்தியத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தலினால் (நடபடிகள் 17:11) சோதிக்க முடியும்.

இன்றைய நாட்களில் உலகமானது கள்ளப் போதனைகளின் பெருக்கத்தில் மூழ்கியுள்ளது. ஒவ்வொரு நாளும் ஒரு புதிய கள்ளப் போதனையைக் கொண்டுவருவதாகச் சிலவேளைகளில் காணப்படுகிறது. என்னிடத்தில் அவ்வப்போது, "இந்தத் தவறுகள் எல்லாவற்றையும் சாத்தியமான வகையில் நாம் எவ்வாறு கையாள முடியும்?" என்று கேட்கப்பட்டது. எனது பதில் பின்வருமாறு உள்ளது: தேவனுடைய வசனத்தைத் தொடர்ந்து வாசித்து, படித்து, சிந்திப்பதால்தான். தேவனுடைய வசனத்தின் சத்தியம் உங்களுக்குள் ஆழப்பதியப்பட்டு இருந்தால், நீங்கள் தவறான உபதேசத்தைக் கேட்ட மாத்திரத்தில் அதை அடையாளம் காணக்கூடியவர்களாக இருப்பீர்கள். உபதேச சோதனையைக் காட்டிலும் அதிக முக்கியமான சோதனை வேறு எதுவும் இருப்பதில்லை. ஒரு நபர், வசனத்தைப் போதிக்கவில்லை என்றால், அவர் கள்ளப் போதகராக இருக்கிறார்.

இருப்பினும் நாம், கள்ளப்போதகர் ஒருவரை அவரது போதனையைக் கொண்டே எல்லா வேளைகளிலும் அடையாளம் காண இயலாது. பிசாசும்கூட வேதவசனங்களை மேற்கோள் காண்பிக்க முடியும் (மத்தேயு 4:6). சிலவேளைகளில், ஒரு கள்ளப் போதகர் போதிக்கத் *தவறுவது* என்ன என்பதைக் காட்டிலும் அவர் போதிக்கிறது என்ன என்பது அதிகம் பிரச்சனையாக இருப்பதில்லை.[27] ஆகவே நாம் சோதித்துப் பார்க்க வேண்டிய கூடுதல் கனியுள்ளது.

அடுத்ததாக நான் ஒழுக்கம் பற்றிய சோதனையைப் பட்டியலிடுவேன்: போதகர் ஒருவரின் வாழ்வின் கனியை பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. அவர் செய்கிறவற்றில் "ஆவியின் கனி" (கலாத்தியர் 5:22, 23) தெளிவாக உள்ளதா இல்லையா என்று நாம் கேட்க வேண்டும். வரலாற்றுப்பதிவேடுகளின்படி, சபையின் தொடக்க நூற்றாண்டுகளில், கள்ளத் தீர்க்கதரிசிகள்/போதகர்கள் முதன்மைப் பிரச்சனையாக இருந்தனர். இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் Didache[28] என்ற ஏவுதல் பெற்றிராத புத்தகம்,

கள்ளப் போதகர்களை அடையாளம் கண்டுகொள்ளுதல் மீதான பகுதி ஒன்றைக் கொண்டுள்ளது.[29] பயணம் செய்யும் பிரசங்கியார்களுக்குத் தங்கும் வீடு அளிக்கும்படி கிறிஸ்தவர்கள் எதிர்பார்க்கப் பட்டனர்; ஆனால் இந்தப் பதிவேடு, "அவர் ஒரு நாள் தங்கியிருப்பார், அவசியமென்றால் இன்னொரு நாளும் தங்கியிருப்பார்; ஆனால் அவர் மூன்று நாட்களுக்குத் தங்கியிருப்பார் என்றால், அவர் ஒரு கள்ளத் தீர்க்கதரிசி என்கிறது." பயணம் செய்யும் பிரசங்கியார்கள் உணவு கேட்கக் கூடும், ஆனால் Didache என்ற புத்தகம், "அவர் பணம் கேட்டார் என்றால், அவர் ஒரு கள்ளத் தீர்த்ததரிசி என்றாகிறது" என்று எச்சரித்தது.[30] இன்றைய நாட்களில், ஒரு போதகர் எவ்வாறு வாழ்கிறார் மற்றும் அவர் என்ன செய்கிறார் என்பவற்றை நாம் இன்னமும் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது.

இருப்பினும், ஒரு கள்ளப் போதகர் எப்போதுமே அவரது வாழ்வினால் அடையாளம் கண்டுணரப் படுபவராக இருப்பதில்லை. சில கள்ளப் போதகர்கள் நல்ல, ஒழுக்கமான வாழ்வை வாழ்கின்றனர். அப்படிப்பட்டவர்களை நாம் எவ்வாறு அடையாளம் காண முடியும்? *விளைவுகளின்* சோதனை என்பது கடைசி சோதனையாக உள்ளது: அவரது போதனை எவ்வகையான கனியை *உண்டாக்குகிறது?* "நீதியாகிய சமாதான பலன்" என்பதே தேவன் விரும்புகிற விஷயமாக உள்ளது (எபிரெயர் 12:11). யாக்கோபு "நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது" என்று எழுதினார் (3:18). எல்லா விதையும் (போதனையும்) சமாதானத்தை உண்டாக்குவதில்லை அல்லது சமாதானத்தில் விதைக்கப்படுவதில்லை என்பது கவலைக்குரியதாக உள்ளது. தவறான வகையிலான போதனையினால் விளையும் பல எதிர்மறை விளைவுகள் 2 தீமோத்தேயு 2ம் அதிகாரத்தில் காணப்படுகின்றன:

*தேவபக்தியின்மை மேம்படுத்தப்படுதல்:* சீர்கேடான பேச்சுக்கள் "அதிக அவபக்திக்கு வழிநடத்த" க்கூடும் (வசனம் 16).

*விசுவாசம் கவிழ்த்துப் போடப்படுதல்:* உபதேசம் "அரிபிளவையைப்போலப் படர்ந்து" "சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடக்" கூடும் (வசனங்கள் 17, 18).

*சண்டைகள் ஊக்குவிக்கப்படுதல்:* "புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்கும்" (வசனம் 23).

பின்வருவன போன்ற கேள்விகளை நாம் கேட்பது அவசியமாகிறது: இந்தத் தனிநபருடைய போதனையின் விளைவாக, மக்கள் கர்த்தருக்கு அதிகம் நெருக்கமாகி இருக்கின்றனரா? அவர்கள் ஒழுக்கரீதியாக நல்ல வாழ்க்கையை வாழ்கின்றனரா? அவர்கள் தேவனுடைய வசனத்திற்கு இன்னும் அதிகம் உண்மையுள்ளவர்களாக இருக்கின்றனரா? அவர்கள் ஒருவர் பிறரின் மீது அதிக அன்பைக் காண்பிக்கின்றனரா?

இதில் கனியானது படிப்படியாக வளருகிறது என்பதால், இந்த மூன்றாவது சோதனை சற்றுக் காலம் எடுத்துக்கொள்கிறது. விஷயம் இப்படி இருப்பதால், யாரேனும் ஒருவரைக் கள்ளப் போதகர் என்று பெயரிட நாம் மிகவும் துரிதமாயிருக்கக் கூடாது. J. W. மெக்கார்வீ அவர்கள், "நல்ல மரங்களின் மீது [வளருகிற] சில கெட்ட கனி மாதிரிகள் என்ற இலேசான மற்றும் அற்பமான செயல்களைக் கொண்டு நாம் துரிதமாகத் தீர்ப்பிட்டு விடக்கூடாது" என்று

எழுதினார்.[31] முன்பே குறிப்பிட்டபடி, நல்ல ஆப்பிள் மரத்தில்கூட புழுக்கள் உள்ள ஒரு ஆப்பிள் பழம் இருக்கக் கூடும். எனவே இந்த சோதனையை நடைமுறைப் படுத்துவதற்குப் பொறுமை தேவைப்படுகிறது, ஆனால் நாம் ஒழுக்கத்தின் சோதனையைப் புறக்கணித்துவிடக் கூடாது. இது மிகவும் முக்கியமானதாக உள்ளது.

**இது என்ன வேறுபாட்டை ஏற்படுத்துகிறது?**

நமது மத வழிகாட்டிகள் உண்மையானவர்களாக உள்ளனரா அல்லது தவறானவர்களாக உள்ளனரா என்பது என்ன வேறுபாட்டை ஏற்படுத்துகிறது? கள்ளப் போதகர்கள், அழிவுக்கு இட்டுச் செல்லும் விசாலமான வழியில் உள்ளனர் (காண்க வசனம் 13). இயேசு பின்வருமாறு கூறினார்,

> நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும் (வசனம் 19; 3:10 உடன் ஒப்பிடவும்).

மரங்களின் வரிசையைக் கொண்ட தெருக்களுடன் கூடிய அன்பான பழைய அயலகத்தைக் கொண்ட இடத்தில் நான் வசிக்கிறேன். இந்த மரங்கள் முதன்மையாக அலங்கார வகையாக உள்ளன. இருப்பினும் பலஸ்தீன நாட்டில் மரங்கள் வழக்கமாக அலங்காரத்திற்காக வளர்க்கப்படவில்லை. அவைகள் விறகுக்காகவோ அல்லது கட்டுமானப் பொருள்களுக்கு மரங்கள் அளிக்கவோ வளர்க்கப் பட்டு இருக்கலாம், ஆனால் அவைகள் கனிகளுக்காகவே பிரதானமாக வளர்க்கப்பட்டன. ஒரு மரமானது உண்ணத்தக்க கனியை உண்டாக்காவிட்டால், அது நல்ல மரங்களுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களை மண்ணில் இருந்து உறிஞ்சிக் கொண்டிருந்ததாகக் கருதப்பட்டது. ஆகவே நல்ல கனியை உற்பத்தி செய்யாத மரம் வெட்டப்பட்டு விறகாகப் பயன்படுத்தப்பட்டது. “கெட்ட மரம்” என்பது கள்ளத் தீர்க்கதரிசிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திற்று என்பது உண்மையே. கள்ளப் போதகர்கள் நரகத்தின் அக்கினியில் தண்டிக்கப்படுவார்கள் என்று இயேசு தெளிவாகப் போதித்தார். “கள்ளப் போதகர்களின்” வருகையைப் பற்றிப் பேதுரு எழுதியபோது, அப்படிப்பட்டவர்கள் “தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள்” என்று அவர் எழுதினார் (2 பேதுரு 2:1).

கள்ளப் போதகர்களைப் பின்பற்றுபவர்களின் விஷயம் என்ன? அவர்களும் அதே அழிவுக்கு இட்டுச் செல்லும் அதே சாலையில் உள்ளனர். இயேசு, “குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே” என்று கூறினார் (மத்தேயு 15:14). அவரது கூற்றை நாம் பின்வருவது போன்று தழுவிக்கொள்ளலாம்: ஒரு கள்ளத் தீர்க்கதரிசி வஞ்சகமாக வழிநடத்தினால், அவரும் அவரால் வழிநடத்தப்படுகிறவரும் ஆகிய இருவருமே நித்திய அழிவை நோக்கிச் செல்கின்றனர். இதனால்தான் அது, நாம் சரியான ஆவிக்குரிய வழிகாட்டிகள் கூறுவதைக் கவனிக்கும்படி ஒரு வேறுபாட்டை - நித்தியமான ஒரு வேறுபாட்டை - ஏற்படுத்துகிறது.

நம்மில் ஒவ்வொருவரும், எந்த ஒரு அல்லது எல்லா போதகர்களையும் அவர்களின் போதனைகளையும் சோதனைக்கு உட்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளோம். நாம் அலகுகளைத் திறந்து வைத்துக் கொண்டு தாய்ப்பறவை அவற்றிற்குள் இடும் எதையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக

உள்ள குஞ்சுப்பறவைகளைப் போல் இருக்கக் கூடாது. பெரோயா நகரில் இருந்தவர்கள் "மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால்" அவர்களை லூக்கா பாராட்டினார் (நடபடிகள் 17:11). "காரியங்கள்" என்பவை பவுலின் போதனைகளாக இருந்தன. பவுல் போதித்தவை வேதவசனத்தின்படி இருந்தனவா இல்லையா என்பதைக் காண்பதற்கு அவர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தனர்! நமக்குப் போதிப்பவர்களைக் குறித்து நீங்களும் நானும் அவ்வாறே செயல்பட வேண்டும். யோவான், "உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று *சோதித்தறியுங்கள்*" என்று கூறியதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் (1 யோவான் 4:1; வலியுறுத்தம் கூட்டப்படுகிறது).

## முடிவுரை

நாம் இந்தப் பாடத்தை முடிக்கையில், "நீங்கள் பயணம் செய்யும் வழி எது?" என்று கேட்க மீண்டும் என்னை அனுமதியுங்கள். இரு சாலைகள் உள்ளன: அழிவுக்கு இட்டுச் செல்லும் விசாலமான வழி மற்றும் ஜீவனுக்கு இட்டுச் செல்லும் நெருக்கமான வழி. நீங்கள் எந்த எந்த வழியில் பயணம் செய்கிறீர்கள்? இரு வகையான வழிகாட்டிகள் உள்ளனர்: ஒருவர் பொய்யானவராகவும் இன்னொருவர் உண்மையானவராகவும் இருக்கிறார். நீங்கள் எவ்வகையான வழிகாட்டியைப் பின்பற்றுகிறீர்கள்? நாம் எந்த வழியில் இருக்க வேண்டும் என்று இயேசு விரும்புவதைப் பற்றியோ அல்லது நாம் எவ்வகையான ஆவிக்குரிய வழிகாட்டி கூறுவதைக் கேட்டுப் பின்பற்ற வேண்டும் என்று அவர் விரும்புவதைப் பற்றியோ சந்தேகம் எதுவும் இருப்பதில்லை.

மத்தேயு 7:13ல் உள்ள "வழியாய் உட்பிரவேசியுங்கள்" என்ற வார்த்தை, வெறும் புத்திமதியாக மாத்திரம் இருப்பதில்லை; அவைகள் ஒரு அழைப்பாகவும் உள்ளன. நமது வேதபாட வசனப் பகுதியில், இயேசு வெறுமனே நம்மை எச்சரிப்பது மாத்திரமல்ல; அவர் நம்மை வரவேற்கவும் செய்கிறார்.[32] கேட்க விருப்பமுள்ள யாவரிடத்திலும் இன்னமும் அவர், "இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்" என்று வேண்டிக் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

குறிப்புகள்:

[1]Clovis G. Chappell, *The Sermon on the Mount* (Nashville: Abingdon-Cokesbury Press, 1930), 207. [2]William F. Arndt and F. Wilbur Gingrich, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 4th ed., rev. and aug. (Chicago: University of Chicago Press, 1957), 326. [3]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 426. [4]Archibald Thomas Robertson, *Word Pictures in the New Testament,* vol. 1 (Nashville: Broadman Press, 1930), 61. *Thlipsis* என்ற வார்த்தைக்கு உறவு வார்த்தையான *thlibo* என்பது ஏறக்குறைய எப்போதுமே உபத்திரவத்தைக் குறிக்கிறது. [5]உங்கள் உரையைக் கேட்பவர்கள் "சுலபமானது" என்று கருதும் பாதைவழி ஒன்றை விவரியுங்கள். நான், நிழலான, மென்மையான வெளிச்சத்தால் ஒளியூட்டப்பட்ட, காற்றில் இனிய இசை

*ஒலிக்கும், மலையிலிருந்து இறங்கும் பாதையொன்றைக் கற்பனை செய்வேன்.* [6]George W. Bailey, "The Narrow Gate and the Straitened Way," *The Preacher's Periodical* (now *Truth for Today*) (July 1982): 22. [7]Ibid., 36. [8]Arndt and Gingrich, 773. [9]*இயேசுவைப் பின்பற்றக்கூடும்படிக்குத் தமது "சுமையை" இறக்கி வைத்துவிட மனமின்றி இருந்த ஒருவருக்கு, செல்வந்தரான இளம் அதிகாரி உதாரணமாக இருக்கிறார் (லூக்கா 18:18-25). ஒரு கருத்தில் நாம் யாவரும், கிறிஸ்தவர்கள் ஆகும்போது ஏராளமான "சுமைகளை" நம்முடன் கொண்டு வருகிறோம், பின்பு அதை இறக்கிப் போடுவதற்கு வாழ்நாள் முழுவதிலும் வேலை செய்ய வேண்டியுள்ளது; ஆனால் மனந்திரும்புதல் என்பது, நாம் கிறிஸ்தவ வாழ்வைப் பாவம் குறித்தப் புதிய எண்ணப்போக்குடன் தொடங்கி அன்றாடம் இயேசுவைப் போல் இன்னும் அதிகமாக ஆக வேண்டும் என்று வற்புறுத்துகிறது.* [10]Manford George Gutzke, *Plain Talk on Matthew* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1966), 63.

[11]Coy Roper, "How to Please God," sermon preached at Trent church of Christ, Trent, Texas, 5 February 2006. [12]Vine, 164. [13]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 196. [14]Vine, 493. [15]*கள்ளத் தீர்க்கதரிசிகளைக் கள்ளப்போதகர்களுக்குச் சமானமாக்கும் 2 பேதுரு 2:1ம் வசனத்தைக் கவனியுங்கள்.* [16]Vine, 367. *"கள்ளத் தீர்க்கதரிசிகள்" என்பது "கள்ள" என்பதற்கான வார்த்தையை "தீர்க்கதரிசி" என்பதற்கான வார்த்தையுடன் இணைத்துப் பெறப்பட்ட pseudoprophetes என்ற கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து வருகிறது (*Vine, 493). [17] Adapted from Stott, 197. [18]*பிசாசும்கூட வேதவசனங்களில் இருந்து மேற்கோள் காண்பிக்க முடியும் (மத்தேயு 4:6).* [19]*அவர்கள் அடிக்கடி, வேதவசனத்தில் இருந்து மாறுபட்ட வகையில் வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றனர், ஆனால் பேசுவதற்குச் சரியான வார்த்தைகளை அவர்கள் அறிந்துள்ளனர்.* [20]Vine, 138.

[21]Alan Highers, "Beware of False Teachers," *Spiritual Sword* (April 2007): 1. [22]*"ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டுள்ள இந்த ஓநாய்கள் நம்மை ஏமாற்றி வஞ்சிக்காமல் நம்மைக் காத்துக் கொள்வது எப்படி?" என்ற கேள்வியில் உள்ள சொற்றொடராக்கம் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமானது என்றால் நீங்கள் அவர்களிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்கலாம்.* [23]Adapted from Vine, 347; Robertson, 62. [24]Harold Fowler, *Matthew I,* Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1968), 426. [25]*"கெட்ட" என்பதற்குப் பதிலாக* KJV *வேதாகமத்தில் "மோசம்போக்குகிற" மற்றும் "பொல்லாத" என்றுள்ளது. இவைகள் மிகச்சரியற்ற மொழிபெயர்ப்புகளாக இருப்பது இல்லை, ஆனால் இவ்வேத வசனம் தாவர வாழ்வைப் பற்றியதாக இருப்பதால், "கெட்ட" என்பது இந்தச் சிந்தனையின் மிகச்சிறந்த சொல்விளக்கமாக இருக்கலாம்.* [26]*யோவான் ஒரு குறிப்பிட்ட கள்ளப் போதனையைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார், ஆனால் நாம் அவரது வார்த்தைகளில் இருந்து பொதுவான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும்.* [27]*வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், ஒரு கள்ளப் போதகர், அன்பு தயவு மற்றும் இரக்கம் போன்ற தலைப்புகள் - எல்லா முக்கியமான தலைப்புகள் - பற்றிப் பேசலாம், ஆனால் அவர் "நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும்" போன்ற (காண்க நடபடிகள் 24:25) குறைவான புகழ்பெற்ற தலைப்புகளை ஒருக்காலும் தொடமாட்டார்.* [28]*Didache என்பது "போதனை" அல்லது "உபதேசம்" என்று அர்த்தப்படுகிற கிரேக்க வார்த்தையாகும்.* Didache *என்பது "புறஜாதியாருக்குப் பன்னிரு அப்போஸ்தலர்கள் மூலமாகக் கர்த்தரின் போதனை [உபதேசம்]" என்று தன்னை உரிமை கோருகிறது. இது நடைமுறை விஷயங்கள் மீது தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் கைப்புத்தகம் என்ற வகையைச் சேர்ந்ததாக இருந்தது.* (J. R. Michaels, "Apostolic Fathers,"

*The International Standard Bible Encyclopedia,* rev., ed. Geoffrey W. Bromiley [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979], 1:207.) [29]Didache 11.1-12.5. [30]Didache 11.9.

[31]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 267. [32]Bailey, 21.